திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்: திரு. வே.விஷ்ணு இ.ஆ.ப.,

ந.க.எண்.ஏ2/ 7538/2019

நாள்: 06.07.2022

பொருள்: ஆதிதிராவிடர் நலம் - வன்கொடுமை தடுப்பு சட்டம்- திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், முன்னீர்பள்ளம் கிராமத்தை சேர்ந்த திரு.ராஜாமணி த.பெ உசேக்குமார் என்பவர் 25.02.2019 அன்று பிற இனத்தவர்களால் கொலை செய்யப்பட்டது தொடர்பாக வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் முன்னீர்பள்ளம் காவல்நிலைய குற்ற எண் 73/2019-இன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அவரின் வாரிசுதாரரான அவரின் சகோதரர் திரு.ஈஸ்வர் த.பெ உசேக்குமார் என்பவர்க்கு கருணை அடிப்படையில் பணியிடம் வழங்கி ஆணையிடல் தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை நிலை எண் 896 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள்:09.07.1990.
2. புதுடெல்லி சமூகநீதி மற்றும் மேம்பாட்டு அமைச்சக அறிவிக்கை நாள்:23.12.2011, 23.06.2014, 14.04.2016 (இந்திய அரசு கெஜட் பதிவெண் DL 33004/99, புல்லட்டின் எண்: 268, நாள்:14.04.2016.
3. சென்னை ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க எண் ஏ4/20713/2019, நாள்:04.11.2019.

---

**ஆணை:**

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், முன்னீர்பள்ளம் கிராமத்தை சேர்ந்த திரு.ராஜாமணி த.பெ உசேக்குமார் என்பவர் 25.02.2019 அன்று பிற இனத்தவர்களால் கொலை செய்யப்பட்டது தொடர்பாக வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் முன்னீர்பள்ளம் காவல்நிலைய குற்ற எண் 73/2019-இன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அவரின் வாரிசுதாரரான அவரின் சகோதரர் திரு.ஈஸ்வர் த.பெ உசேக்குமார் என்பவர்க்கு பார்வை 1-இல் கண்டுள்ள அரசாணை நிலை எண் 896 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள்:09.07.1990 மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை சட்ட விதிகளின் படி கருணை அடிப்படையில் கீழ்கண்டவாறு பணிநியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | பணி நியமனம் செய்யப்படும் பதவி மற்றும் இடம் |
|---|---|---|
| 1. | திரு.ஈஸ்வர்,<br>த.பெ உசேக்குமார்,<br>ஈஸ்வரி அம்மன் கோவில் தெரு,<br>மருதம் நகர்,<br>முன்னீர்பள்ளம். | இளநிலை உதவியாளர்,<br>ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,<br>சேரன்மகாதேவி. |

நிபந்தனைகள்:

1. தனியர் Civil Surgeon தகுதிக்கு குறைவில்லாத அரசு மருத்துவ அலுவலரிடம் பெற்ற உடற்தகுதிச்சான்று, அனைத்து அசல் கல்விச்சான்றுகள், சாதிச்சான்று ஆகியவற்றினை பணியேற்பின் போது சம்மந்தப்பட்ட அலுவலரிடம் சமர்பிக்க வேண்டும்.
2. இந்நியமனம் அரசு ஏற்று பணிவரன்முறை செய்யப்படும் வரை முற்றிலும் தற்காலிகமானது.
3. எந்நேரமும் முன்னறிவிப்பின்றி நியமனத்தை ரத்து செய்யும் அதிகாரம் மாவட்ட ஆட்சித்தலைவர்/ அரசுக்கு உள்ளது.
4. தனியர் இந்நியமனம் பொருட்டு தந்திருக்கும் விபரங்கள் பின்னாளில் பொய்யானது/ தவறானது என்று தெரியவரும் நிலையில் இவர் பணிநீக்கம் செய்யப்படுவதுடன் உரிய நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படுவார்.

ஒம்/வே. விஷ்ணு,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி.

/உண்மை நகல்/

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
திருநெல்வேலி

பெறுநர்
திரு.ஈஸ்வர்,
த.பெ உசேக்குமார்,
ஈஸ்வரி அம்மன் கோவில் தெரு,
மருதம் நகர்,
முன்னீர்பள்ளம்.

6-7-22

நகல்:

1. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சிப்பிரிவு), திருநெல்வேலி
2. வட்டார வளர்ச்சி அலுவலர்,ஊராட்சி ஒன்றிய அலுவலகம், சேரன்மகாதேவி
3. மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்,
   பழங்குடியினர் நல அலுவலர்,
   திருநெல்வேலி.
4. அரசு செயலர்,
   ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
   தலைமைச் செயலகம்,
   சென்னை-600 009.
5. ஆணையர், ஆதிதிராவிடர் நல ஆணையரகம்,
   சேப்பாக்கம், சென்னை- 600 005.